# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.24223/விசாரணை/2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு V.கணேசன்,<br>த/பெ. வேல்,<br>150, வடக்கு கார் தெரு,<br>திருச்செந்தூர் – 628 215.<br>தூத்துக்குடி மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>செயலாளர்,<br>திருச்செந்தூர் சர்வோதயா சங்கம்,<br>எண்.1, பரமன்குறிச்சி ரோடு,<br>திருச்செந்தூர் – 628 215. |

*****

மனுதாரர் திரு V.கணேசன் சார்பாக வழக்கறிஞர் திரு J.ஆன்டணி ஜீஸஸ் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு S.இராமலிங்கம், செயலாளர், திருச்செந்தூர் சர்வோதயா சங்கம், திருச்செந்தூர் இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 05.06.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், செயலாளர், திருச்செந்தூர் சர்வோதயா சங்கம், தூத்துக்குடி அவர்களிடம் 5 இனங்களில் சர்வோதயா சங்கத்தின் மூலம் விற்பனை செய்த சில பொருட்கள் குறித்த தகவல்களைக் கேட்டிருக்கின்றார். தகவல் பெறாததால் 15.07.2009 அன்று செயலாளருக்கு ஒரு நினைவூட்டுக் கடிதமும், 03.08.2009 அன்று சட்டப்

பிரிவு 19(1)–ன் கீழ் பதிவாளர், சார்ப் பதிவாளர் அலுவலகம் அவர்களுக்கு மேல் முறையீடும் செய்துள்ளார். 24.08.2009 அன்று விற்பனைப் பொருட்கள் தொடர்பாகக் குறிப்பிட்டு எந்தத் தேதி என்று தெரிவித்தால் தகவல்கள் தரப்படுமென்று பதில் அளிக்கப்பட்டுள்ளது. தகவல்கள் பெறாத நிலையில் 22.09.2009 அன்று சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் இதே தகவல்களை மீண்டும் மீண்டும் கேட்பதாகவும், அவர் கேட்கும் போதெல்லாம் உரிய தகவல்கள் அளிக்கப்படுவதாகவும் பொதுத் தகவல் அலுவலர் விசாரணையில் கூறினார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்களின் நகல்களை விசாரணைக்குப் பொதுத் தகவல் அலுவலர் எடுத்து வந்திருந்தார். விசாரணை முடிவில் மனுதாரர் சார்பாக வந்திருந்த வழக்கறிஞரிடம் உரிய தகவல்களின் நகல்கள் வழங்கப்பட்டு, ஒப்புதலும் பெறப்பட்டதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.01.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.24223/விசாரணை/2009**</u>

பொதுத் தகவல் அலுவலர்,
செயலாளர்,
திருச்செந்தூர் சர்வோதயா சங்கம்,
எண்.1, பரமன்குறிச்சி ரோடு,
திருச்செந்தூர் – 628 215.

திரு V.கணேசன்,
த/பெ. வேல்,
150, வடக்கு கார் தெரு,
திருச்செந்தூர் – 628 215.
தூத்துக்குடி மாவட்டம்.

*"ptl"*